## முதல்வர் மு.க.ஸ்டாலினின் 40 மாத 'திராவிட மாடல்' ஆட்சியில்

# 1,666 புதிய நியாய விலைக் கடைகள்!

## வறுமை ஒழிப்பில் 'தமிழ்நாடு' இந்தியாவில் முதலிடம்! ஒன்றிய அரசு பாராட்டு!

**சென்னை, ஜன. 5-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் 40 மாதங்களில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பல்வேறு புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு மக்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திட மாபெரும் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளது.**

**1,666 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 230 நெல் கொள் முதல் நிலையங்களும், ரூ.359 கோடியில் மேல் கூரையுடன் நெல் சேமிப்புத் தளங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.**

**இந்தியாவிலேயே அதிகமான நெல் சேமிப்புக் கிடங்குகள் உள்ளதையொட்டி, தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு முதல்பரிசு வழங்கிச்சிறப்பித்துள்ளது. வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் ஒன்றிய அரசு பாராட்டுத் தெரிவித்துள்ளது.**

அதன் விவரம் வருமாறு :-

தமிழ்நாட்டில் நெல், அரிசி உட்பட அத்தியாவசியப் பொருள்களின் இருப்பு நிலவரங்களை எப்போதும் சீராக நிர்வகித்திட உதவும் வகையில் வெளிச் சந்தை வர்த்தகம் உட்பட அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்படி 23.2.1972 அன்று நிறுவப் பட்டது.

தமிழ்நாட்டு மக்களுக்குக் குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கியது உட்படப் பல்வேறு திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றபின் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை வாயிலாக நிறைவேற்றப்பட்டுள்ள புதிய திட்டங்களால் தமிழ்நாட்டிலிருந்து வறுமை முற்றிலும் அகற்றப்பட்டு மக்கள் பசிப் பிணி ஒழிந்து வளமான வாழ்வில் மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

ஒன்றிய அரசின் ஆய்வு அறிக்கைகள் வாயிலாக வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டு பாராட்டப்பட்டுள்ளது. கடந்த 40 மாதங்களில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியப் பணிகள் விவரம் :

### உணவு பொருள் வழங்கல் துறை குறை தீர்ப்புப் பணிகள்!

மாதாந்திர பொது விநியோகத்திட்ட குறைதீர்க்கும் நாள் முகாம்கள் நடத்தப்பட்டு நகல் அட்டை, புதிய குடும்ப அட்டை, முகவரி மாற்றம், பெயர் சேர்த்தல். உள்ளிட்ட 1 இலட்சத்து 83 ஆயிரத்து 610 கோரிக்கைகள் பெறப் பட்டு அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப் பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பொது மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நிவாரணத் தொகையாக ரூ.4,000/- வீதம் 2 கோடியே 8 இலட்சத்து 14 ஆயிரத்து 528 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நியாய விலைக் கடைகளின் மூலம் 14 மளிகைப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு 2 கோடியே 7 இலட்சத்து 70 ஆயிரத்து 726 அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்களைத் தகுதியான பயனாளிகளுக்கு அளிக்கும் பொருட்டு கைவிரல் ரேகை பதிவு முறை ஏற்படுத்தப்பட்டு, ஆதார் எண்கள் குடும்ப அட்டைகள் இணைக்கப் பட்டுள்ளன.

### புதிய நியாயவிலைக் கடைகள் திறப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி, ஏழை எளிய பொதுமக்களின் வசதிக்காக அவர்களுடைய குடியிருப்புகளுக்கு அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக 633 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1,033 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தம் 1,666 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

31.12.2023 வரை நியாய விலைக் கடைகளின் உட்புற மற்றும் வெளிப்புறச் சூழலை மேம்படுத்துவதற்கான பணிகள் 2,778 நியாய விலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### சிறுதானிய உணவு குறித்த விழிப்புணர்வு!

2023ஆம் ஆண்டு சர்வதேசச் சிறுதானிய ஆண்டாக ஐ.நா.சபையினால் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறுதானிய உணவுத் திருவிழா நிகழ்ச்சிகள் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு மக்களிடையே சிறுதானிய உணவு குறித்த விழிப்புணர்வு வளர்க்கப் பட்டது.

விவசாயிகள் விளைவிக்கும் நெல்லினை இடைத்தரகர்கள் தலையீடின்றியும் கால தாமதமின்றியும் உடனடியாக விற்பனை செய்யும் பொருட்டு ஆன்லைன் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டு 1 கோடியே 8 இலட்சத்து 35 ஆயிரத்து 621 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

### விருப்பப்படி அரிசிக்குப் பதில் கோதுமை!

அரிசி பெறும் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மாநகராட்சிப் பகுதிகளில் 10 கிலோ வீதமும். ஏனைய பகுதிகளில் 5 கிலோ வீதமும் நியாய விலைக் கடைகளின் இருப்பைப் பொறுத்து அவர்களது விருப்பத்தின்படி அரிசிக்குப் பதிலாகக் கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது. இதுவரை 7 இலட்சத்து 23 ஆயிரத்து 482 மெ.டன் கோதுமை விலையில்லாமல் குடும்ப அட்டைதாரர்களுக்குவழங்கப்பட்டுள்ளது.

### புயல் பாதித்தபோது திராவிட மாடல் அரசு வழங்கிய நிவாரணம்!

கடந்த 2023 ஆம் ஆண்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய தினங்களில் வீசிய மிக்ஜாம் புயலினால் ஏற்பட்ட கனமழையினால், சென்னை, திருவள்ளூர். காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.6,000/ வீதம் வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 23 இலட்சத்து 18 ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு ரூ.1,390.92 கோடி மாநிலபேரிடர்நிவாரணநிதியிலிருந்து நிவாரண நிதியாக வழங்கப்பட்டது.

### தென் மாவட்டங்கள் புயலால் பாதித்தபோது வழங்கப்பட்ட நிவாரணம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 17.12.2023, 18.12.2023 ஆகிய இரு தினங்களில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் பெய்த அதிகனமழையினால் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் இரண்டு நாட்களுக்கு மேல் வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள் / பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருள்களை இழந்த 6 இலட்சத்து 36 ஆயிரத்து 971 குடும்பங்களுக்கு ரூ.6,000/- மற்றும் 5 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில், இதர வட்டங்களில், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மொத்தம் 13 இலட்சத்து 34 ஆயிரத்து 561குடும்பங்களுக்குதலாரூ.1,000/- வீதம் 92சதவீதப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

### கருணை அடிப்படையில் நியமனங்கள்!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணியின் போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் 233 பேர்களுக்குப் பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ஒப்பந்தப் பணியாளர் நிரந்தரம்!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் பருவகாலப் பணியாளர்களாகப் பணி புரிந்து வந்தவர்களுக்கு 12(3) ஒப்பந்தத்தின் அடிப்படையில் 591 பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்கள்!

திராவிட மாடல் அரசு விவசாயிகளின் நலன் கருதி, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குப் படிப்படியாகக் கட்டடங்களைக் கட்டி வருகிறது. 40 மாதங்களில் 230 நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு, இதுவரை 130 நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு எஞ்சியவற்றின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### முதலமைச்சரின் கருணை மனம்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விவசாயிகளின் கடின உழைப்பால் விளைவிக்கப்பட்டு, கொள்முதல் செய்யப்படும் ஒரு நெல் மணி கூட வீணாகக் கூடாது என்ற கருணை மனதோடு 358.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 259 மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்புத் தளங்களை நிறுவ ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, 213 நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டு எஞ்சியவை கட்டப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாட்டிற்கு முதல் பரிசு!

புதுடெல்லியில் உள்ள தேசிய கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காகத் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது.

இப்படி ஒவ்வொரு துறையிலும் பாராட்டு களைப் பெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, உணவுத் துறையில் தன்னிறைவு அடைவதற்காகப் புதிய பல திட்டங்கள் தந்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திச் சாதனைகள் நிகழ்த்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (03.01.2025) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் 2021–2022 முதல் 2024–2025 வரையிலான ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், காவேரி தொழில்நுட்ப குழும தலைவர் சுப்பிரமணியன், நீர்வளத்துறை சிறப்பு செயலாளர் ஸ்ரீதர், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் மற்றும் மண்டல பொறியாளர்கள் மற்றும் மண்டல முதன்மை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## நீர் வளத்துறையின் மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட

# 6 அணைகளின் பொறியாளர்களுக்கு ஊக்கத்தொகை - விருதுகள்!

## நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்!

*சென்னை, ஜன.5-*

*நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நீர் வளத்துறையின் மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 6 அணைகளுக்கான "சிறந்த அணை பராமரிப்பு" விருதுகளை வழங்கினார்.*

*2011-2012 முதல் தமிழ்நாடு அரசு ஒரு குழுவினை அமைத்து சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட அணையினை ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுத்து அவ்வணையில் பணிபுரியும் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் முதல் செயற் பொறியாளர் வரை ஊக்க தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/ மற்றும் கண்காணிப்பு பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*அதன்படி, நேற்று முன்தினம் (03.01.2025), தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அரசால் அமைக்கப்பட்ட குழுவினரால் தேர்வுசெய்யப்பட்ட 2016-2017ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அணை, 2017-2018 ஆம் ஆண்டிற்கு ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை, 2018-2019 ஆம் ஆண்டிற்கு தருமபுரி மாவட்டம், வாணியாறு அணை, 2019-2020 ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணை, 2020-2021 ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டம், மேட்டூர் அணை மற்றும் 2021-2022 ஆம் ஆண்டிற்கு தென்காசி மாவட்டம், கருப்பாநதி அணை ஆகிய 6 அணைகளில் பணிபுரிந்த செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/ வழங்கியும் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கி கௌரவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். மன்மதன், நீர்வளத்துறையின் மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் திருமதி எம்.ஜானகி, ஆர்.தயாளகுமார், எஸ்.முருகேசன் மற்றும் எஸ்.ரமேஷ், நீர்வளத்துறையின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவின் தலைமைப் பொறியாளர் எஸ். கோபாலகிருஷ்ணன் மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்கள் கலந்துக்கொண்டனர்.*



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 2025 ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் நடைபெறவுள்ளதால் சட்ட மன்றப்பேரவை அரங்கத்தினை நேற்று முன்தினம் (03.01.2025) ஆய்வு செய்தார். இந்தஆய்வில் பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் சென்னை மண்டலம் எஸ்.மணிவண்ணன் மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 'அரசியல், ஆட்சி நிர்வாகம், இலக்கியம், சினிமா அனைத்திலும் தனித்துவத்துடன் விளங்கியவர் கலைஞர்'

## முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கில் நாஞ்சில் சம்பத் – வாசகர்கள் கலந்துரையாடல்!

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளது இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம். அந்த அரங்கில் திராவிட இயக்க ஆளுமைகள் - வாசகர்கள் சந்திப்பு, கலந்துரையாடல் நிகழ்ச்சி நாள்தோறும் நடக்கிறது.




நேற்று முன்தினம் கலந்து கொண்ட திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் அவர்கள் பேசுகையில், `உலக வரலாற்றிலேயே நூறு ஆண்டுகளுக்கு மேலாக எந்த விதமான மாறுதலும் இல்லாமல் கொள்கை உறுதியோடு இருக்கும் இயக்கம் திராவிட இயக்கம்தான்' எனக் குறிப்பிட்டார்.

### உலகமே வியக்கிறது

பட்டுக்கோட்டை அழகிரி மேடையில் பேசுகிறார் என்றால், கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள், ஒரு பழைய துணியை அவர் அருகில் வைப்பார்கள். அவர் நெஞ்சிலிருந்து ரத்தம் கொட்டும் ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்குவார். அப்படி, தனது உடல், ஆவி அத்தனையையும் கொட்டி வளர்ந்த இயக்கம்தான் திராவிட இயக்கம்.

அன்று அவர்களெல்லாம் வகுத்துத் தந்த பாதையில்தான், இன்று நாம் நடந்து செல்கிறோம்.

கலைஞரின் ஆளுமையை உலகமே வியக்கிறது. இந்தியத் தலைவர்களில் நேருவுக்குப் பிறகு கலைஞர் மட்டும்தான் ஆட்சியிலும், இலக்கியத்திலும் ஆளுமையாக விளங்கியவர்.

### மிக அவசியமானது

அண்ணாவின் தம்பியாக, அவருக்குப் பின் கழகத்தை 50 ஆண்டுகாலம் தனது தலைமையில் வழிநடத்தினார் என்றால், இந்தச் சாதனையை, இந்திய வரலாற்றில் கலைஞரைத் தவிர, வேறு யாரும் செய்ததில்லை.

இதுபோன்று திராவிட இயக்கத் தலைவர்களுடைய வரலாற்றை அறிந்துகொள்வது மிக அவசியமானது.

வாசியுங்கள், வாசித்ததை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள் . முடிந்தவர்கள் உங்கள் பகுதிகளில் படிப்பகத்தை உருவாக்குங்கள்" என்றும் கேட்டுக் கொண்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் விழுப்புரம் அய்யனார் கோயில் தெரு, ரங்கநாதன் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்குவதற்கான டோக்கன் வீநியோகத்தை துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.இரா.இலட்சுமணன் அன்னியூர் அ.சிவா, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், இணை பதிவாளர், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்சநாதன், நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணை தலைவர் சித்திக்அலி உள்ளிட்ட நகர நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட வார்டு கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலைக்கல்லூரியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.60 லட்சம் மதிப்பில் உணவக கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாநகராட்சி ஆணையாளர் அனு, துணை மேயர் தாமரைச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடலூர் சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி புதிய உணவகம் கட்டும் பணியை தொடங்கி வைத்தார். இதில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பிரமிளா, உதவி செயற்பொறியாளர் சிவசங்கர நாயகி, பேராசிரியர்கள் சாந்தி ராமகிருஷ்ணன், நிர்மல் குமார், இளவரசன், சீனிவாசன், மனோகரன், கவுன்சிலர் மகேஸ்வரி விஜயகுமார், கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், உதவி பொறியாளர்கள் சுரேஷ், வினோத்குமார் மற்றும் கலையரசன், சுகுமார், தேவராஜ், தென்னரசு, வீரமணி, வடிவேல், தொ.மு.ச. ஸ்ரீதர், சக்திவேல், இளங்கோ, மதிவாணன், செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.